விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 307 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 04 திங்கட்கிழமை (21.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஏப்ரல் 21 தாக்குதல் விசாரணை

# அறிக்கைகளை வெளியிட அநுரவுக்கு இன்று காலை வரை அவகாசம்

### எச்சரிக்கிறார் உதய கம்மன்பில



*(கொழும்பு)* இதுவரை வெளியிடப்படாத ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கைகளை இன்று காலை 10 மணிக்கு முன்னதாக ஜனாதிபதி அநுர வெளியிட வேண்டும். இல்லையேல் அவ் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார். *(விரிவு 3ஆம் பக்கத்தில்)*

## செலவு அறிக்கை சமர்ப்பிக்காத ஜனாதிபதி வேட்பாளர்கள்

### சட்ட நடவடிக்கைக்குத் தயார்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தங்களது வருமானம் மற்றும் செலவு அறிக்கையினைச் சமர்ப்பிக்காத மூன்று வேட்பாளர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான சட்ட நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொள்வார்கள் என தேர் தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 15

## தமிழர் உரிமைகளை வென்றெடுப்போருக்கே வாக்களியுங்கள்

### மன்னார் ஆயர் அறிக்கை

13ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் தமிழர்களை கனடா பாதுகாக்கும்

### ஜஸ்ரின் ட்ருடோ உறுதி

05ஆம் பக்கம் பார்க்க

## சுத்தமான இலங்கை புதிய செயலணி உருவாக்கம்

### ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

(ஹோமாகம)

விசேட ஜனாதிபதி செயலணியொன்றை உருவாக்கி சுத்தமான இலங்கை என்ற பெயரில் புதிய வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு 15

### 'திருடர்களைப் பிடிக்கும்போது சிணுங்காதீர்கள்'

# ஊழல்வாதிகளுக்கு நிச்சயம் தண்டனை வழங்கியே தீருவோம்!

### ஜனாதிபதி அநுர சூளுரை



(கட்டுநாயக்க)

**திருடர்களைப் பிடிக்கும்போது எவரும் சிணுங்காதீர்கள், மோசடியாளர்களுக்கும் ஊழல்வாதிகளுக்கும் தண்டனை வழங்குகின்ற அரசாங்கம் தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியுள்ளார்.**

பொதுத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டம் கட்டுநாயக்கவில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி அநுர மேற்கண்டவாறு கூறினார். 15

## 2025 வ.செ.திட்டம் மார்ச்சில் - ஜனாதிபதி

(மாத்தறை)

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 2025 பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

அரச துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பது, பாடசாலை மாண 15

## இடைக்கால வ.செ.திட்டத்தால் பாரிய பிரச்சினை ஏற்படும்

### சுசில் பிரேமஜயந்த காட்டம்



(கொழும்பு)

அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காமல் இருப்பது பாரிய பிரச்சினையாகும். 15

## உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் இடம்பெறும்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கண்டி)

பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்து 35 முதல் 40 நாட்களுக்குள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித் 15

## வடக்கில் இன்று இடியுடன் மழை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக வடக்கின் கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் இன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ந-7)

## யாழ் - கொழும்பு புகையிரத சேவை இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

யாழ் - காங்கேசன்துறைக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையிலான புகையிரத சேவை இன்று திங்கட்கிழமை இடம்பெறுமென சில ஊடகங்கள் தெரிவித்தபோதிலும் அது 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு.நல்லையா பத்மநாதன்

(ஓய்வு பெற்ற பொறியியலாளர்,வீதி அபிவிருத்தி அதிகார சபை, தர்மகர்த்தாக்களில் ஒருவர்/நுணாவில் மேற்கு மணங்குணாய் வீரகத்தி விநாயகர் ஆலயம்)



தோற்றம் 10.04.1951 மறைவு 17.10.2024

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில், புத்தளம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பத்மநாதன் அவர்கள் 17.10.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நுணாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லையா - சிவபாக்கியம் தம்பதியரின் புத்திரனும் நுணாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராஜபூபதி தம்பதியரின் மருமகனும் புஸ்பவதி அவர்களின் ஆருயிர்க் கணவரும் கலைவாணி, விசாலினி, சிந்து ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேமகாந்தன்(கணக்காளர், U.K), Dr.மயூரன்(சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), கிந்துஜன் (குடிசார் பொறியியலாளர், Mildura City Council - Australia) ஆகியோரின் அன்பு மாமனாரும் தருண், மவிரா, கிறிசி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற கைலைநாதன் மற்றும் சற்குணநாதன், ஆனந்தேஸ்வரி அற்புதநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் புஸ்பராணி, ஞானறஞ்சி, நவீந்திரன், சிவசோதி, சுதாதரணி, துளசி ஆகியோரின் மைத்துனரும் பாஸ்கரமூர்த்தி, யோகலிங்கம் ஆகியோரின் சகலனும் Dr.நிமலன், Dr.கஜந்தன், கஜிதா, சபேசன், சதீசன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் அசோக், கோபியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ரதன், லக்ஷ்மன், அஜானி, விசாகன், கல்யாணி, துயோசரணி, கவிஷன், பவதி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (21.10.2024) இன்று திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் நுணாவில் மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் : குடும்பத்தினர்*
**077 6018 719**

(456)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் விண்ணப்பதாரரின் பெயர் : கந்தையா கோகுலசிங்கம் பெண் நொயெலீன் தமயந்தி ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : உரிமையாளர்
ஆதன இல - 25 வீதி - அகஸ்ரர் வீதி, வட்டாரம் 02

வட்டாரம் 02 அகஸ்ரர் வீதி, ஆதன இலக்கம் 25 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவிற்பற்று **சிறுவிளான் இறை "அத்துவாம்புலம் "** எனும் பெயருள்ள நிலப்பரப்பு 07 குளி **5,1/2** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனத்தில் அரைவாசி நிலப்பரப்பு 03 குளி **11.75** பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 1602 ஆம் இலக்க 2005.05.28 ஆம் திகதிய உறுதி மூலம் சுவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை கைம்பெண் ஆன்கிறேஸ் அருந்ததி என்பவர்களால் இவ் ஆதனம் எனது சொந்தமும் நீண்டகால பிசகுதடையற்ற ஆட்சியுமானதென வெளிப்படுத்தல் செய்யப்பட்டு **கந்தையா கோகுலசிங்கம் பெண் நொயெலீன் தமயந்தி** என்பவருக்கு நிலப்பரப்பு 03 குளி **11.75** சீதனம் வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் ஆ.சிற்றம்பலம் அவர்களால் வரையப்பட்ட 5476 ஆம் இலக்க 2023.06.20 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 03 குளி 11.75 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு,

வடக்கு - முன்னுறுதிப்படி அந்தோனிப்பிள்ளை பெண் எலிசபெத்தின் ஆதனம்
கிழக்கு - சவரிமுத்து சுவாம்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம்
தெற்கு - சமரக்கோண் மகள் மிசியம் வதனிக்குரிய ஆதனம்
மேற்கு - ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை **கந்தையா கோகுலசிங்கம் பெண் நொயெலீன் தமயந்தி** என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேடுகளில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(2353)

# தேர்தலில் போட்டியிட்ட ரவீந்திரன் விலகினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக் குழு மூலம் தேர்தலில் போட்டியிடும் ஆறுமுகம் ரவீந்திரன் தான் தேர்தலில் இருந்து முற்று முழுதாக விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

ஆறுமுகம் ரவீந்திரன் ஆகிய நான் நவம்பர் மாதம் நடைபெற இருக்கின்ற தேர்தலிலிருந்து முற்று முழுதாக விலகிக் கொள்கின்றேன் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

மாற்றுத் திறனாளிகளின் பிரதிநிதியாக இக்களத்தில் இறங்கவேண்டுமெனப் பல தரப்புகள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே நான் சுயேட்சைக் குழு மூலமாக எனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தேன்.

எனினும் ஜனாதிபதி அவர்கள் மாற்றுத்திறனாளியான சகோதரர் ஒருவரைத் தங்கள் தேசிய பட்டியலில் இணைத்துள்ளதாக அறிகின்றேன். அதுமாத்திரமல்ல, வடபுலத்திலிருந்தும் மாற்றுத் திறனாளியான சகோதரியொருவர் தேர்தல் களத்தில் உள்ளதாகவும் அறிகின்றேன்.

இந்த நிலையில் தேர்தல் களத்தில் என்னுடைய பிரவேசம் அவசியமற்றது எனக் கருதியே இந்த முடிவினை மேற்கொண்டுள்ளேன். எனவே எனது பெயருக்கு யாரும் வாக்களிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (ந-7)

# சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் அறிவித்தல்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினால் 2022, 2023 ஆம் ஆண்டுகளில் க.பொ.த (உ/த) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கு ஏற்ப பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கும் க.பொ.த (சா/த) பரீட்சையில் 5 பாடங்களில் அதி விஷேட சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கும் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் கௌரவிப்பு விழா நடத்த இருப்பதால் இதற்கு தகுதியுடைய அந்தண குல மாணவர்கள் (இருபாலாரும்) தங்களுடைய விபரங்களை அத்தாட்சிப்படுத்தி 31.10.2024 ஆம் திகதிக்கு முன்பு பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு **077 150 5413, 077 617 6752, 076 637 0913** ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**சோ.கேதீஸ்வர சர்மா**
**(குருக்கள்)**
**செயலாளர்**

(2359)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா சதானந்தன் (வவா)

தோற்றம் 14.01.1957 மறைவு 02.11.2023

திதி : தேய்பிறை பஞ்சமி

ஆண்டு ஒன்று ஆனதையா
ஆழ்மனம் இன்னும் தேடுதையா
பாசமும் பரிவும் பாதையாக
பேரப்பிள்ளைகளே என்றும் உயிராக
குழந்தையாய் மாறி குதூகலிப்பீர்
குறையொன்றும் இல்லா தந்தையானீர்
ஆண்டுகள் நூறு ஆகிடினும்
பாதையும் பயணமும் மாறிடினும்
நீங்கா நினைவுகள் நிலைத்திருக்கும்
என்றும் நீரே எங்களின் வழிகாட்டி

"சரஸ்வதி மகால்"
[illegible] தெற்கு,
[illegible].

நெஞ்சம் மறக்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

(455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# நிறைவடையும் கால அவகாசம்

## மீண்டும் எச்சரிக்கை விடுக்கும் கம்மன்பில

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான வெளியிடப்படாமல் இருந்த இரண்டு அறிக்கைகளை வெளியிடுவதற்கு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் இன்று காலையுடன் நிறைவடைவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி வெளியிடத் தயங்கும் இரண்டு அறிக்கைகளை வெளியிடுமாறு நான் ஜனாதிபதிக்கு வழங்கியிருந்த நேரம் இன்று காலை 10 மணியுடன் முடிவடைகிறது.

இந்த அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதன் மூலம், அரசியலமைப்பில் அவருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றி, அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்படும் அபாயத்தைத் தவிர்க்கலாம்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி அரசியலமைப்பின் 38 ஆவது சரத்தை மீறி, அறிக்கையை வழங்கத் தவறினால், நான் நிச்சயமாக அந்த அறிக்கைகளை முன்வைப்பேன் என அவர் தெரிவித்தார். (நி-8)

## பிரதமரை சந்தித்த ஐரோப்பிய தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் Carmen Moreno மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் கொழும்பு பிரதமர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கைக்கிடையில் காணப்படும் வலுவான மற்றும் நீண்டகால தொடர்புகள் இந்த சந்திப்பின் ஊடாக மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு பங்களிப்பு செலுத்திய GSP+ வர்த்தக யோசனைத் திட்டத்திற்கென ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஊழலை ஒழித்தல் மற்றும் முதலீட்டுச் சபை போன்ற நிறுவனங்களை பலப்படுத்துவதன் ஊடாக வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்துக் கொள்வது தமது அரசின் நோக்கமென பிரதமர் இதன் போது மேலும் தெரிவித்தார். (நி-8)

## ரணிலின் கோரிக்கையை நிராகரித்த ஜனாதிபதி

(கொழும்பு)

சமையல்காரர்கள், 163 பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் 20 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிராகரித்துள்ளார்.

தங்காலையில் ஆரம்பமான பாராளுமன்றத் தேர்தல் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்க விதிமுறைகளுக்கு இணங்க ரணில் விக்கிரமசிங்கவுக்கு மூன்று வாகனங்கள் மாத்திரமே வழங்கப்படும்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதிகள் பொதுமக்களின் நிதியில் தேவையற்ற சலுகைகளைப் பெறுவதைத் தடுப்பதற்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் இதன் போது மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாதுகாப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிவிப்பில் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பில் உள்ளதாக கூறப்படும் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் சரியான தகவல் அல்ல.

எவ்வாறெனினும் ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்ட எழுத்துமூல பணிப்புரைக்கு அமைய இன்று திங்கட்கிழமை மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட்ட 6 உத்தியோகபூர்வ வாகனங்களில் 3 வாகனங்களை ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-8)

## புதிய அமைச்சரவையில் 25 உறுப்பினர்கள் மாத்திரம்

### அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலின் பின்னர் நியமிக்கப்படும் அரசாங்கத்தில் தற்போதைய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவே பிரதமராக இருப்பார் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை 25 உறுப்பினர்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.

அடுத்த ஆண்டுக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டம் எதிர்வரும் டிசம்பரில் முன்மொழியப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் அவசியமா என்பதை கண்டறிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்போது வீடுகளில் பணிபுரியும் குழுவாக மாறியுள்ளமை பொலிஸ் அதிகாரிகளையும் அவமதிக்கும் செயலாகும். இவ்வாறு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார். (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டிகள்

### ஈட்டி எறிதல் - மன்னார் தோட்டவெளி - தங்கம்
### நீளம் பாய்தல் - யாழ்.சென் ஜோன்ஸ் - வெள்ளி
### தட்டெறிதல் - பளை மத்தி - வெள்ளி







அகில இலங்கை பாட சாலை களுக்கு இடையிலான ஆண் கள், பெண்களுக்கான மெய் வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகதாஸ விளை யாட்டு மைதானத்தில் நடை பெற்று வருகின்றன.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் மன்னார் தோட்ட வெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித் துவம் செய்த மாணவி ஏ.யதுர்சிகா 37.39 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து தங்கப்பதக் கமும் , 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூ ரியைப் பிரதி நிதித்துவம் செய்த மாணவன் எஸ்.ஜெ. சஞ்சீ வன் 7.13 மீற்றர் தூரம் நீளம் பாய்ந்து வர்ண சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கமும், 16 வயதிற்கு உட்பட்ட ஆண் களுக்கான தட்டெறிதல் போட்டியில் பளை மத்திய கல்லூரியைப் பிரதிநிதித் துவம் செய்த மாணவன் கே.தன தீபன் 46.72 மீற்றர் தூரம் தட்டை எறிந்து வெள்ளிப் பதக்கமும் கைப் பற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (6-90)

### காட்டா, குமித்தே போட்டிகளில் இரு வெள்ளிப்பதக்கங்கள்

2024 இற்கான இலங்கை கராத்தே தோ சம்மேளனத் தினால் நடத்தப்பட்ட தேசிய ரீதி யிலான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 17,18ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரகம உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற் றது.

இப்போட்டியில் பங்கு கொண்ட I.S.S.K.A கராத்தே கழக பிரதம ஆசிரியர் றென்சி எஸ். விஜய ராஜ் [50-55] வயதுப் பிரிவில் காட்டா, குமித்தே போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டார். (6-8)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3245

அமிர்தா




தனுசன்




மதுஷா




விதுஷன்




லக்ஷனா




அபிஷாந்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களை கனடா எப்போதும் பாதுகாக்கும்



## ஜஸ்டின் ட்ரூடோ உறுதி

(ஒட்டாவா)

ஏனைய பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப்போன்று கனேடிய வாழ் தமிழர்களும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுவதாகவும் அவர்களைப் பாதுகாப்பதற்கு இயலுமான சகல நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுக்கவேண்டும் எனவும் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடாவின் தேர்தல் முறைமைகள் மற்றும் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் மீதான வெளியகத் தலையீடுகள் தொடர்பில் கடந்த 16 ஆம் திகதி நடத்தப் பட்ட பகிரங்க நேர்காணலில் கலந்துகொண்டு பதிலளித்த கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் தமிழர் உரிமைகள் குழுவின் உறுப்பினர் கற்பனா நாகேந்திராவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கனடாவின் ப்ரம்டன் நகரில் தமிழினப் படுகொலை நினைவுத்தூபியை அமைப்பதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு வலியுறுத்தி ப்ரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுனுக்கு டொரன்டோவில் உள்ள இலங்கையின் கொன்சியூலர் நாயகம் துஷர ரொட்ரிகோவினால் கடந்த மே மாதம் எழுதப்பட்ட கடிதம், கடந்த ஓகஸ்ட் மாதம் ஆங்கில ஊடகமொன்றினால் பகிரங்கப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந் நினைவுத் தூபியை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட வேளையிலும் அதற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தி அங்கு வாழும் புலம்பெயர் சிங்களவர்களால் கவனயீர்ப்புப்போராட்டமொன்று நடத்தப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற்குறிப்பிட்ட பகிரங்க நேர்காணலின்போது கனடாவில் வாழும் தமிழர் களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இலங்கை அர சாங்கத்தினால் அண்மைய காலங்களில் மேற் கொள்ளப்பட்டு வரும் தலையீடுகள் தொடர்பில் கனேடிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று கற்பனா நாகேந்திரா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிர தமர் ட்ரூடோ, இக்குறித்த சம்பவம் தொடர்பில் தனக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் ஏனைய பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப் போன்று கனேடியவாழ் தமிழர்களும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத்தான் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த அவர், புலம்பெயர் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான சகல நட வடிக்கைகளையும் தாம் முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். (ஙி-8)

# வீட்டில் தீ பரவல் மூவர் உயிரிழப்பு

## சிலாபத்தில் துயரம்

(சிலாபம்)

சிலாபம், சிங்கபுர பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று இரவு ஏற்பட்ட இந்த தீ விபத்தில் தாய், தந்தை மற்றும் அவர்களது பிள்ளை கள் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான பிரதான காரணம் தெரிவிக்கப்படாத நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஙி-8)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

பேராசிரியர். அருணாசலம் சிவபாதசுந்தரம் நினைவுப்பேருரை-2024

பேருரைத் தலைப்பு:
"Young Lungs, Big Challenges: Impact of Respiratory Disease in Children of Northern Sri Lanka"

(இளம் நுரையீரல்கள், பெருஞ்சவால்கள்: வட இலங்கையின் சிறுவர்களில் சுவாச நோய்களின் தாக்கம்)

பேருரை வழங்குநர்:
Dr. (Mrs). Nirubaa Umasankar,
Senior Lecturer,
Department of Paediatrics,
Faculty of Medicine,
University of Jaffna.

(வைத்திய கலாநிதி.திருமதி.நிருபா உமாசங்கர்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
குழந்தை மருத்துவத் துறை,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)

திகதி : 22.10.2024 (செவ்வாய்க்கிழமை) பி.ப 3.00 மணி

நிகழ்விடம்:
கூவர் கலையரங்கம்,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


# இராசிபலன்

21.10.2024
ஐப்பசி 04, திங்கட்கிழமை
சதுர்த்தி முற்பகல் 9.39 மணிவரை

ரோகினி பிற்பகல் 12.33 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை

சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி.

வளவன்

**மேஷம்**
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் , வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்**
அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் பெருகி வளம் காணும் நாள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்**
புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதம் என்பன ஏற்படலாம், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள்.

**மகரம்**
செய் தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், மறைமுகப் போட்டிகள் மாறும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானம் வந்து சேரலாம்.

**ரிஷபம்**
எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், உடல்நலன் சீராகும், பணத்தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும்.

**சிம்மம்**
முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வருகையால் உற்சாகம் கிடைக்கும்.

**கும்பம்**
புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**மிதுனம்**
வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஊர் மாற்றம் இட மாற்றம் என்பன இடம்பெறலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் இருப்பது நல்லது.

**கன்னி**
பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**தனுசு**
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நீண்ட நாளைய வழக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

காரியத்தில் உறுதியாய் இருப்பதே வெற்றியின் இரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலையில் அமையவுள்ள யாழ். போதனாவின் கண் வைத்தியசாலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் வைத்தியசாலை அமைப்பதற்காக நன்கொடையாக வழங் கப்பட்ட காணியில் மர நடுகை செய்யப்பட்டது.

அரியாலையைச் சேர்ந்த வரும் தற்போது அமெரிக்காவில் வசித்து வரும் சுப்பிரமணியம் பாலேந்திரா, யாழ் - கண்டி நெடுஞ்சாலையில் அரியாலைப் பகுதியில் அமைந்துள்ள தனக்கு சொந்தமான இரண் டரை ஏக்கர் காணியை கண் வைத்தியசாலைக்காக நன் கொடையாக வழங்கியுள்ளார்.

அக் காணியில் நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் மரநடுகை செய்யப்பட்டது.

நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை உதவிப் பணிப்பாளர் வைத்தியர் சி.ஜமுனானந்தா, கண் வைத்திய நிபுணர் வைத்தியர் மலரவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். குறித்த காணியில் கண் வைத்தியசாலை நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அது வட மாகாண மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (6-8-33)

# சிறுவர், மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் திறந்து வைப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் சிறுவர், மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் இடம்பெற்ற மேற்படி திறப்புவிழா நிகழ்வில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்து கொண்டு சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகத்தை திறந்து வைத்திருந்தார்.

மேலும் நிகழ்வில் வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தனபால, யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜெயசிங்க மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரியபண்டார ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-30)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச சபை செயலகப்பிரிவில் வசிக்கின்ற நாற்பது வயதிற்குட்பட்ட இளம் கலைஞர்கள் மற்றும் அறுபது வயதிற்கு மேற்பட்ட மூத்த கலைஞர்களிடமிருந்து 2024 ஆம் ஆண்டுக்கான பிரதேச விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்விருத்திற்காக விண்ணப்பிக்கும் கலைஞர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் தமது கலைச் சேவை தொடர்பான ஆவணங்களையும் தலைவர் கலாசாரப்பேரவை, பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் என்ற முகவரிக்கு எதிர்வரும் 23.10.2024 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக் குமாறு வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. மதியழகன் சுபாஜினி அறிவித்துள்ளார். (6-8

# கட்டட திறப்பு விழா

( யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் சங்கத் தலைவர் சி. தவச்செல்வன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக. யாழ் மாவட்டக் கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.கி.சந்திர சேகரம் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6-8)

# தேர்தல்களம்




# மக்கள் விரும்பும் மாற்றம் எம் ஊடாக கிடைக்கும்

## மான் சின்னத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் மணிவண்ணன்



(யாழ்ப்பாணம்)

எமக்கு பாராளுமன்ற உறுப் புரிமை கிடைக்கும் போது, பாராளுமன்ற உறுப்பினரால் இதெல்லாம் செய்ய முடியுமா? என நீங்கள் வியக்கும் அளவுக்கு செய்து காட்டுவோம் என தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.


தமிழ் மக்கள் கூட்டணி யின் யாழ். தேர்தல் மாவட் டத்தில் போட்டியிடும் வேட் பாளர்களின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் யாழில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே இவ் வாறு தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியான சூழலை அடுத்து தென்னி லங்கையில் பழைய அர சியல் வாதிகளை தென்னி லங்கை மக்கள் ஓரம் கட்டி விட்டனர். அவர்களும் அரசியலில் இருந்தும் ஒதுங்கிக்கொண்டனர். ஆனால், தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ எதுவும் செய்யாத தமிழ் அரசியல் வாதிகள் இன்றும் தேர்தலில் நிற்கின்றனர்.

எமது தேர்தல் பிரசாரங் களில் நாம் மற்றைய கட்சிகள் மீது சேறு வீசும் தேவை எமக்கு இல்லை. நாங்கள் என்ன செய்தோம் என சொல்லும் அளவுக்கு மக்களுக்கு நாங்கள் சேவை செய்துள்ளோம் என தெரிவித்தார். (6-8-33)

# தமிழ்த் தேசியமே எம் உயிர் மூச்சு

## தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் சிறீதரன்



(கிளிநொச்சி)

எங்கள் அடையாளங்களை இழக்கத் துணி யும் எந்த மாற்றங்க ளுக்கும் எமது இளைய தலைமுறை யினர் உட்பட்டு விடக் கூடாது என பாராளுமன்ற முன்னாள் உறுப்பி னரும் இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளருமாகிய சிவஞானம் சிறீதரன் தெரி வித்துள்ளார்.

கிளிநொச்சி நகர வட்டார சமூகமட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஈழத்தமிழர்களை அரசியல் வெறுமை சூழ்ந்த காலத்தே, இனத்துக்கே அடையாளம் தந்த "தமிழ்த் தேசியத்தை" கொள்கையாக வரித்து நாம் ஆரம்பித்த அரசியற் பயணத்தை, அதே தளத்தில் நின்று பிறழாத பிரதிநிதிகளாக இதுவரை காலமும் முன்னெடுத்திருக்கிறோம்.

அத்தகைய அடையாளத்தை நிரந்தரமாகப் பேணும் வகையிலான அரசியல் செல்நெறிகளின் மூலம், இனத்தின் இறைமையை மீட்கும் என் அரசியற் பணியும் பயணமும் தொடரும் எனத் தெரிவித்தார்.

சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டி ருந்தனர். (6-8)



திருமறைக் கலா மன்றத்தின் கலைத் தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் எட்டாவது ஆண்டாக இடம் பெறுகின்ற "சித்திர முத்திரைகள்" என்னும் ஓவிய, கைவினைப் பொருட்களின் கண்காட்சி கடந்த வெள்ளிக் கிழமை கலைத் தூது அழகியல் கல்லூரியில் காலை ஆரம்பமானது. இக் கண் காட் சி இன்று மாலை 4 மணியுடன் நிறைவு [illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலை முன்னிட்டு இலங்கை வரும் கண்காணிப்புக்குழு

**(கொழும்பு)**

**இலங்கையின் பொதுத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக ஆசியத் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் முதலாவது குழு எதிர்வரும் 25ஆம் திகதி நாட்டிற்கு வரவுள்ளது.**

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே கண்காணிப்பு குழு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

இந்த நிலையில் குறித்த அமைப்பைச் சேர்ந்த 30 கண்காணிப்பாளர்கள் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க வருவார்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக வருகைதந்த ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தொடர்ந்தும் நாட்டிலேயே தங்கியுள்ளன.

பொதுத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக




அவர்களுடன் மேலதிகமாக ஒரு குழுவும் இணைந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சொத்து விபரங்களை சமர்ப்பித்த வேட்பாளர்களுக்கு அ.அட்டை

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அடையாள அட்டை தயாரிக்கும் முறை தொடங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்பாளர் அடையாள அட்டைகள் தங்கள் சொத்து மற்றும் கடன்களை அறிவித்த வேட்பாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

வேட்பாளர்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்வதற்கும், வாக்கு எண்ணும் நிலையங்களுக்குச் செல்வதற்கும் வசதியாக இந்த அடையாள அட்டை வழங்கப்படுகிறதாகவும் தேர்தல் ஆணையத் தவிசாளர் ஆர். எம். எல்.ஏ. ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)


மணிவிழா வாழ்த்து
அருட்சகோதரி. அருள்மரியா (அ கா)
(அதிபர் யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)






Best Wishes
வாழ்த்துவோர் – கோட்டக்கல்விப் பணிப்பாளரும்
அதிபர்கள் சங்கமும்
கோப்பாய் கல்விக் கோட்டம்.
(1424

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
அதிபர் அருட்சகோதரி அருள்மரியா அவர்களின்
மணிவிழா வாழ்த்து

சேவை விபரம்

திரு/சென்.மேரிஸ் தேசிய பாடசாலை =திருகோணமலை
(03.02.1992=15.05.1996) ஆசிரியர்
கொ/சென்.அன்ரனிஸ் மகளிர் மகா வித்தியாலயம் =கொழும்பு=3
(16.05.1996=04.01.1997) ஆசிரியர்
மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
(05.01.1997=06.01.1999) ஆசிரியர்
கொ/சென்.அன்ரனிஸ் மகளிர் மகா வித்தியாலயம் = கொழும்பு=03
(07.01.1999=16.05.2005) ஆசிரியர்
பு/தேத்தாபொலை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்=புத்தளம்
(17.05.2005=01.12.2008) அதிபர்
கொ/சென்.அன்ரனிஸ் தமிழ் மகா.வித்தியாலயம் = கொழும்பு = 14
(02.12.2008=16.03.2014) அதிபர்
மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி = மட்டக்களப்பு
(17.03.2014=19.02.2020) அதிபர்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி = அச்சுவேலி
(20.02.2020=20.10.2024) அதிபர்

(சி-1423)

புகழ் நிறை சாவகச்சேரி பதி வித்தகியே!
பார் போற்றும் கார்மேல் சபை சோதரியே!
அருள் ஞானம் பூண் ஆளுமை முதல்வரே!
அரச பணி நிறைவு நயப்பு வாழ்த்து!

அருட்சகோதரி அருள்மரியா
(இலங்கை அதிபர் சேவை-2)






பாடசாலை சமூகம்,
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி , அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

## அமைதி வழியில் போருக்கு முடிவு ரஷ்யா ஜனாதிபதி புடின் விருப்பம்



(மொஸ்கோ)

உக்ரைன் உடனான போரை அமைதியான வழிகளில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என ரஷ்யா ஜனாதிபதி புடின் தெரிவித்தார்.

சமீபத்தில் உக்ரைன் தலைநகர் கீவ் சென்ற பிரதமர் மோடி, உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை சந்தித்துப் பேசினார். அப்போது அவர் ரஷ்யா உடன் நடந்து வரும் போருக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். இந்நிலையில், ரஷ்யாவில் ஒக்டோபர் 22, 23 ஆம் திகதிகளில் பிரிக்ஸ் மாநாடு நடைபெற உள்ளது. இதுவரை மொத்தம் 15 பிரிக்ஸ் மாநாடுகள் நடந்துள்ளன.

புடின் அழைப்பின் பேரில் பிரதமர் மோடி ஒக்டோபர் 23 ஆம் திகதி பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க ரஷ்யா செல்கிறார். இது குறித்து மொஸ்கோவில் செய்தியாளர்கள் சந்திப்பில் புடின் தெரிவித்ததாவது, மோதலை தீர்ப்பதில் ரஷ்யா ஆர்வமாக உள்ளது.

உக்ரைன் உடனான போர் குறித்து தொடர்ந்து கவலைகள் தெரிவித்து வரும் பிரதமர் மோடிக்கு நன்றி.

பிரதமர் மோடியுடன் பேசும் போது, ஒவ்வொரு முறையும் போரை முடிவுக்கு கொண்டு வரும்படி, தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறார். உக்ரைன் உடனான போரை அமைதியான வழிகளில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.


நாங்கள் அல்ல, ஆனால் உக்ரைன் தரப்புதான் அதை செய்ய வேண்டும். பிரிக்ஸ் அமைப்பு யாருக்கும் எதிரானது அல்ல. ரஷ்யா, அமெரிக்கா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணம் அமெரிக்கா தான். இவ்வாறு புடின் தெரிவித்தார். (நி-8)

# நெதன்யாகு ...

# தாக்குதல் நடத்தி...

❖காசா மீது பதில் தாக்குதல் நடத்திய ...

❖73 பேர் உயிரிழப்பு! பலர் மாயம்! உ...



ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டதை இஸ்ரேல் உறுதி செய்த பின்னர் இந்த தாக்குதலானது நடந்துள்ளது.

ட்ரோன்களை இஸ்ரேல் பாதுகாப்புப் படை அழித்ததால் சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த கொலை முயற்சி குறித்து நெதன்யாகு தெரிவித்ததாவது, என்னையும் எனது மனைவியையும் படுகொலை செய்ய ஈரானின் பினாமி ஹிஸ்புல்லா மேற்கொண்ட முயற்சி ஒரு பெரிய தவறு. இது என்னையும், இஸ்ரேல் அரசையும் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக எதிரிகளுக்கு எதிரான நமது நியாயமான போரைத் தொடர்வதிலிருந்து தடுக்காது என்று எச்சரித்திருந்தார்.

இதனால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் பாலஸ்தீனத்தின் காசா நகரின் மீதும் லெபனான் தலை

(ஜெருசலேம்) —

இஸ்ரேலின் கடற்...

உள்ள பிரதமர் பெ...

மீது ஹிஸ்புல்லா ...

ட்ரோன் தாக்குதல் ...

நகர் பெய்ரூட் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

வடக்கு காசாவில் உள்ள பெய்ட் லாஹியா பகுதியில் வீடுகள் மற்றும்



## தாய்வானுடன் நெருக்கம் இந்தியாவை எச்சரித்த சீனா



(பீஜிங்)

இந்தியாவுடன் தாய்வான் நெருக்கம் காட்டுவதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

டில்லி, சென்னையை தொடர்ந்து தற்போது மும்பையிலும் தாய்வான் தூதரக அலுவலகத்தை திறந்துள்ளது.


தாய்வான் தங்கள் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என சீனா உரிமை கொண்டாடி வரும் நிலையில் இந்தியாவுடனான தொடர்பைத் தாய்வான் வலுப்படுத்தி வருவது சீனாவுக்கு புகைச்சலை ஏற்படுத்தி உள்ளது.

இதுதொடர்பாக பேசிய சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நியாங், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதியான தாய்வானுடன் எந்தவொரு அதிகாரப்பூர்வ தொடர்புகளையும் இந்தியா தவிர்க்க வேண்டும்.

பீஜிங் உடன் தூதரக உறவு வைத்துள்ள நாடுகள், தாய்வானுடன் அலுவலக உறவை ஏற்படுத்துவது கூடாது.

சீன-இந்திய உறவுகளை மேம்படுத்த எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளில், இவ்விவகாரம் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லடாக் எல்லையில் சீனா தங்களின் ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் மீது

# ...திய ஹிஸ்புல்லா!

## ...ய இஸ்ரேல்!

## ...உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அச்சம்!

**...கடற்கரை நகரமான செசாரியாவில் ...பெஞ்சமின் நெதன்யாகுவின் இல்லம் ...லா அமைப்பினர் நேற்று முன்தினம் ...தல் நடத்தியுள்ளனர்.**

அடுக்குமாடி குடியிருப்புகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.


இதில் மருத்துவர்கள் உட்பட



குறைந்தது 73 பேர் வரை உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் கடந்த 2 வாரத்தில் மட்டும் 400 பேர் வரை இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக காசா சிவில் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து லெபனானில் பெய்ரூட் மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் அங்குள்ள மக்களை வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது. ஹிஸ்புல்லா ஆயுதத் தளங்களையே குறிவைத்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (நி-8)



## மின் உற்பத்தி நிலையம் செயலிழப்பு

### இருளில் சிக்கித் தவிக்கும் கியூபா மக்கள்



(ஹவானா)

கியூபாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையம் அன்டோனியோ குட்டரெஸ் இந்த நிலையம் சேதமடைந்துள்ளதால் நாடு முழுதும் மின்சாரம் தடைப்பட்டது.

தீவு நாடான கியூபாவில் ஒரு கோடிக்கும் அதிகமானோர் வசித்து வருகின்றனர். இங்கு கடந்த சில நாட்களாக மின் தடை ஏற்பட்டு வருகிறது.

பொருளாதார சரிவு உட்பட பல்வேறு காரணங்களால் மின் உற்பத்தி உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் செயற்பட்டு வந்த மின் உற்பத்தி நிலையங்கள் தங்கள் உற்பத்தியை நிறுத்தியதை அடுத்து, அவ்வப்போது மின்தடை ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில் நாட்டின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையமான அன்டோனியோ குட்டரெஸ், தன் உற்பத்தியை நிறுத்தியது. இதனால் நாடு முழுதும் மின்சாரம் தடைப்பட்டது.

சமீபத்தில் வீசிய மில்டன் சூறாவளி காரணத்தால் குட்டரெஸ் மின் உற்பத்தி நிலையம் சேதமடைந்ததாக கூறப்படுகிறது. மின்சாரம் தடைபட்டதால், போக்குவரத்து சேவை அடியோடு பாதிக்கப்பட்டது.

கடைகள், வணிக நிறுவனங்கள், ஹோட்டல்கள் உள்ளிட்டவை செயலிழந்தன. முக்கிய சாலைகள் வெறிச்சோடின. இணையதள சேவையும் பாதிக்கப்பட்டதால், கியூபா மக்கள் செய்வதறியாது அதிர்ச்சியில் உறைந்தனர்.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. இரவில் செயற்படும் கேளிக்கை விடுதிகள் உள்ளிட்ட கலாசார மையங்களை மூட அரசு உத்தரவிட்டுள்ளது.

தலைநகர் ஹவானாவில் அனைத்து வர்த்தகங்களும் நேற்று முன்தினம் முதல் நிறுத்தப்பட்டன. உணவு, எரிபொருள், தண்ணீர் மற்றும் மருந்து பற்றாக்குறையால் கியூபா நாட்டு மக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள சூழலில், மின்தடை அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் சிக்கலாக்கி உள்ளது. (நி-8)

## டில்லியில் குண்டுவெடிப்பு



(டில்லி)

டில்லியின் ரோகினி பகுதியில் உள்ள சிஆர்பிஎப் பள்ளிக்கு வெளியே குண்டுவெடிப்பு சத்தம் கேட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

டில்லியின் ரோகினி பகுதியில் உள்ள பிரசாந்த் விஹார் பகுதியில் உள்ள சிஆர்பிஎப் பள்ளிக்கு வெளியே நேற்றுக் காலை 7.45 மணி அளவில், குண்டுவெடிக்கும் சத்தம் கேட்டதாக அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

வெடித்தது வெடிகுண்டு தானா? என்ற தகவல் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் பெற்றோல் குண்டா என்ன என்பது குறித்து, தற்போதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.

ஆனால், பள்ளிக்கு அருகில் இருந்த சில பகுதிகள் சேதமடைந்திருக்கிறது. பள்ளியின் சுற்றுச்சுவரும் லேசாக சேதமடைந்திருக்கிறது. நேற்று ஞாயிற்றுக் கிழமை என்பதால், பள்ளி விடுமுறையின் காரணமாக, யாருக்கும் எந்த சேதமும் ஏற்படவில்லை. (நி-8)

## 10 வயது சிறுவர்களையும்

### சிறையில் அடைக்கும் அவுஸ்திரேலியா

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் வடக்குப் பிரதேசம் குற்றப் பொறுப்பின் வயதைக் குறைக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.

புதிய சட்டம் 10 வயது அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர்கள் சிறையில் அடைக்க அனுமதிக்கிறது.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கன்ட்ரி லிபரல் கட்சி அரசாங்கத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கொள்கையை மாற்றியமைக்கிறது.

முன்னதாக சிறுவர்களை சிறையில் அடைப்பதற்கான வயது எல்லை 12 அல்லது அதற்கும் மேலாக காணப்பட்டிருந்தது.

இந்த நிலையில், புதிய தீர்மானமானது அதிகரித்து வரும் இளைஞர்களின் குற்ற விகிதங்களை குறைக்கும் என்று நம்பப்படுகிறது.

எனினும் மனித உரிமைக் குழுக்கள், மருத்துவ வல்லுநர்கள் மற்றும் பழங்குடியின அமைப்புகள் இந்த நடவடிக்கையைக் கண்டித்துள்ள நிலையில் இந்த முடிவு கடுமையான விவாதத்தைத் தூண்டியுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுர அரசுக்கு எதிராக மீண்டும்
# இணையும் முன்னாள் ஜனாதிபதிகள்?



(கொழும்பு)
புதிய அரசாங்கத்தினால் தமது சிறப்புரிமைகள் குறைக்கப்படுவதற்கு எதிராக குரல் எழுப்புவதற்காக முன்னாள் ஜனாதிபதிகளினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில், தனிப்பட்ட முறையில் போராடுவதை விட, கூட்டாகச் செயற்படுவது பலனளிக்கும் என முன்னாள் ஜனாதிபதிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பட்டய கணக்காளர்களின் 45ஆவது தேசிய மாநாடு கடந்த 16 ஆம் திகதி மூன்று முன்னாள் ஜனாதிபதிகள் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதிகள் கலந்துகொண்டு நாட்டின் பிரச்சினைகள் குறித்து கருத்து தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதிகள் தமது சிறப்புரிமைகளைக் குறைப்பதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன், முன்னாள் ஜனாதி பதிகளின் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவிடம் முன்னாள் ஜனாதிபதிகள் ஏற்கனவே இந்த விடயத்தை முன்வைத்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்புரிமைகள் தொடர்பில் தற்போது அதிகமாகப் பேசப்பட்டு வரும் நிலையில் அரசாங்கம் இந்த மூவரடங்கிய குழுவை நியமித்துள்ளது.

இந்த குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் தொடர்பில் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சலுகைகள் குறைக்கப்படுமாயின் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் தொடர்பான சட்ட மூலத்தில் புதிய திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 240 | 200 | 200 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 180-200 | 400 |
| தக்காளி | 320 | 400 | 300 | 290 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 200 | 150-200 | 200 |
| கோவா | 200 | 300 | 220 | 300 | 300 |
| கரட் | 180 | 200 | 180 | 270 | 200 |
| பூசணி | 100 | 60 | 100 | 80 | 120 |
| புடோல் | 100 | 150 | 100 | 200 | 300 |
| வாழைக்காய் | 180 | 120 | 120 | 80-120 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 300 | 280 | 350 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 200 | 200 | 120 | 130 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 250 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 350 | 350 |
| பீற்றூட் | 120 | 120 | 150 | 130 | 200 |
| கறிமிளகாய் | 580 | 550 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 300 | 150 | 400 |
| போஞ்சி | 480 | 500 | 450 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 220 | 220 | 220 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 60 | 60 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 450 | 350-450 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 140 | 80-150 | 120-170 |
| இராசவள்ளி | -- | 900 | 1200 | 600 | 1000 |
| வெங்காயப்பூ | 350 | 500 | 600 | -- | 480 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 120 | -- | 160 | -- | 150 |

## இன்று ஒரு தகவல் 246



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# உணர்வுகள் பத்து

சார்! அன்று உங்களிடம் ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு பேசிவிட்டேன். அதை ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள் சார்! என்றார் ஒருவர். நீங்கள் உணர்ச்சி வசப்படுவதே ரொம்ப அபூர்வம்! அதற்காக நான் சந்தோஷப்படுகின்றேன் சார்! என்றார்.

என்ன அப்படி சொல்லுகின்றீர்கள் என்றார். உங்களை உணர்ச்சியில்லாத மரக்கட்டை என்று தானே நமது நண்பர்கள் சொல்லுவது வழக்கம் என்றேன்.

அட போங்க சார் என்று மறுபடியும் உணர்ச்சிவசப்பட ஆரம்பித்து விட்டார். மனிதனுக்கு ஏற்படுகின்ற உணர்வுகள் இருக்கிறதே அதிலே சிலது நல்லது செய்யும். சிலது தொந்தரவு செய்யும். ஆக இது இரண்டு வகை. ஒன்று நல்லது, இன்னொன்று கெட்டது.

இப்போது உதாரணத்திற்கு கோபம் நோயை உண்டாக்கும் சிரிப்பு நோயைக் குணப்படுத்தும்.

உணர்வுகள் இல்லாமல் மனிதன் சந்தோஷமாக இருக்க முடியாது. நமது வாழ்க்கையை ஆட்சி செய்வதே அதுதான். மொத்தம் 10 அடிப்படையான உணர்ச்சிகள் உண்டு. அதிலே 5 மோசமானது. 5 நல்ல விதமானது. மோசமான உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது? நல்ல விதமான உணர்ச்சிகளை எப்படி வலுப்படுத்துவது. அது தான் இன்றைக்குத் தகவல்.

மோசமான உணர்ச்சிகள் எது எது தெரியுமா? கோபம், குற்ற உணர்வு, பயம், சலிப்பு, துக்கம். நல்ல விதமான உணர்ச்சிகள்: சிரிப்பு, அன்பு, ஆக்க பூர்வமான எதிர்பார்ப்பு, நம்பிக்கை, தன்னம்பிக்கை. முன்பு சொன்ன ஐந்தும் உடம்பிற்கு கெடுதல். பின்பு சொன்ன ஐந்தும் உடம்பிற்கு நல்லது.

இப்போது ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலில் கோபம்: இது இருதய நோயை உண்டாக்கும். கோபத்தை அடக்கும் போது B.P ஏறுகிறது. Heart attack, Stroke எல்லாம் வரும். வயிற்றிலே அல்சர் வரும். எந்த காரணத்தினாலே கோபம் வந்தாலும் சரி. அது மனதையும் கெடுக்கும். உடம்பையும் கெடுக்கும். உங்களுக்கு கோபம் வந்தால் முதலிலே அது நியாயமான கோபம் தானா என்பதை கொஞ்சம் நிதானமாக யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

இரண்டாவது குற்ற உணர்வு: ஒரு தப்பு செய்தால் அல்லது ஒரு காரியத்தை செய்யத் தவறினால் அதை நினைத்து வருத்தப்படுகின்றோம். தன்னம்பிக்கையை வளர்க்கிறதும் தவறு செய்யாமல் இருக்க பழகிக் கொள்வதும் தான் இதற்கு சரியான வழி.

மூன்றாவது பயம்: எது எதற்குத்தான் பயப்பட வேண்டும் என்று இல்லை. எல்லாவற்றிக்கும் பயப்படுகின்றோம். எல்லோருக்கும் பொதுவான ஒரு பயம், நாமும் நமது உடம்பும் நன்றாக இருக்க வேண்டும் என்கின்ற பயம் தான்! பயத்திற்கான மூல காரணத்தை கண்டுபிடிக்க வேண்டும். அதன் பின்பு அதை விலக்க வேண்டும்.

நான்காவது சலிப்பு: சில பேருக்கு நேரம் கிடைக்கவில்லை என்பது ஒரு பெரிய குறையாக இருக்கும். ஆனால் சில பேருக்கு நேரம் இருக்கும் என்ன செய்வது என்று தெரியாது! இது மிகவும் ஆபத்தானது.

இதனாலே இருதய நோய், செரிமானக் கோளாறு, தோல் தொல்லைகள், மனத்தளர்ச்சி எல்லாம் ஏற்படும். உங்களுக்கு என்று ஒரு பொழுது போக்கு அல்லது வேலையை நீங்கள் தான் உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

ஐந்தாவது: துன்பம், துயரம் அல்லது துக்கம். மனிதன் வருத்தப்படுவதற்கும் எத்தனையோ காரணமும் இருக்கிறது. துக்கத்தைக் கண்டு பயந்தால் அது அதிகமாகுமே தவிர குறையாது. துயரத்தை மனதிற்குள்ளே தேக்கி வைக்கக்கூடாது. தாங்க முடியவில்லை என்றால் அழுது விடுவது நல்லது. இது வரைக்கும் சொன்னதெல்லாம் கெடுதல் செய்கின்ற உணர்வுகள் .

நல்ல உணர்வுகள் எது எது தெரியுமா? சிரிப்பு (களிப்பு) : இது நுரையீரலுக்கும் இதயத்திற்கும் நல்ல பயிற்சி. சிரித்ததற்கு பிறகு பார்த்தீர்கள் என்றால் B.P குறையும் மூச்சுவிடுவது சுலபமாக இருக்கும். நன்றாக தூக்கம் வரும்.

அன்பு பல வியாதிகளை குணப்படுத்தும். நல்ல விதமான எதிர்பார்ப்பு இருக்கின்றது பாருங்கள். அது வாழ்க்கையிலே மிகவும் முக்கியம் . வாழ்க்கையிலே ஒரு நோக்கம் இல்லை என்றால் அது பிரயோசனப்படாது.

நம்பிக்கை மிகவும் அவசியம். நான் எங்கே உருப்படப்போகிறேன் என்று நினைக்கிறவர்கள் உருப்படுவதே இல்லை. தன்னம்பிக்கையும் ஒரு ஆக்கபூர்வமான உணர்வு தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் உங்கள் (Health improve) ஆகும்.(Life improve) ஆகும்.

நல்லவிதமாக சிந்திக்கின்ற நோயாளிகள் சீக்கிரம் குணமாகிவிடுகின்றார்கள் என்று மருத்துவக் கண்டுபிடிப்பு!


ஆகக் கூடியது 10 விதமான உணர்ச்சிகள் பற்றி இன்றைக்கு தெரிந்து கொண்டோம். அதனாலே இனிமேல் நீங்கள் உணர்ச்சி வசப்படுவதற்கு முன்னால் ஒரு கணம் யோசித்து பார்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு பேச்சாளர் ஒரு கூட்டத்திலே வீராவேசமாக பேசிக் கொண்டு இருந்தார். கடைசி கட்டத்திலே உணர்ச்சி வசப்பட்டு அழுது விட்டார். கூட்டம் முடிந்ததும் ஏன் சார் அப்படி அழுதுவிட்டீர்கள் என்று கேட்டேன்.

நான் பேசி முடிக்கிறபோது எதிரிலே உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. எல்லோரும் எழுந்து போய்விட்டார்கள் சார். அது தான் உணர்ச்சி வசப்பட்டு அழுதுவிட்டேன்! என்றார். இந்த உணர்ச்சியை எந்த ரகத்திலே சேர்க்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 லீற்றர் கசிப்புடன் நபரொருவர் கைது




(யாழ்ப்பாணம்)

யாழ். ஊரெழு அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 42 வயதுடைய சந்தேகநபர், 10 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நேற்று கசிப்புடன் குறித்த சந்தேக நபர் கைதாகியிருந்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (6-8)



நெல்லியடி பொலிஸ், கொலின்ஸ் மற்றும் விளையாட்டுக் கழகத்தினர் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் நேற்று கரவெட்டி மூத்த விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்: மகாலிங்கம்)

## இதுவரை 401 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய 401 முறைப்பாடுகள் இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. கிடைக்கப் பெற்றுள்ள சகல முறைப்பாடுகளும் தேர்தல் சட்ட மீறலுடன் தொடர்புடையவை என தெரிவிக்கப்படுள்ளது.

எவ்வாறாயினும் தேர்தல் வன்முறை தொடர்பில் இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய 309 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன் 92 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (6-8)

## போதைப் பொருளுடன் 30 பேர் கைது

(கொழும்பு)

நுவரெலியா- கிரக்கரி வாவிக்கரையிலுள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்ட 30 பேர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-8)

# இறைச்சிக்காக மாடுகளை திருடிய 3 நபர்கள் கைது

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பகுதியில் இறைச்சிக்காக பொதுமக்களின் மாடுகளைத் திருடிய குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்களை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் நீண்ட நாட்களாக பொது மக்களின் மாடுகளைத் திருடி இறைச்சிக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து மூவரை சந்தேகத்தின் பெயரில் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பான மேல்திக விசாரணையைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-285).



கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு நேற்று முன்தினம் பிற்பகல் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கிளிநொச்சி முல்லைதீவு மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் அத்தியச்சகர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் கலந்து கொண்டனர்.

(படம் : தேவானந்தன்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## நட்சத்திரப்பழம்/ தமரத்தம்பழம்

**Botanical name- Averrahoa carambola**
**Family- Oxalidaceae**

எமது பிரதேசத்திற்குரிய பதம். குறைந்த கலோரியும் அதிகளவு நார்ச்சத்து நிறைந்து காணப்படுவதால் எமது செரிமான மண்டலத்திற்கு சிறந்த பழமாகும். அதை உயிர்ச்சத்து C, செம்புச்சத்து, போலேற்று, பொட்டாசியம், மக்னீசியம், உயிர்ச்சத்து B ஆகிய போசனைக்கூறுகள் நிறைந்து காணப்படுகிறது. உடலிற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடிய பழமாகும். மஞ்சள் நிறமான பழங்களை தெரிவு செய்து குறுக்காகத் துண்டுகளாக வெட்டு விதைகளை நீக்கி பழத்தின் இரு முனைகளையும் நீக்கி சாப்பிடலாம்.

அளவாகத்தான் தமரத்தம் பழங்களை சாப்பிட வேண்டும். ஏனெனில் இப்பழங்களில் ஒக்சலேற்று காணப்படுவதால் சிறுநீரகம், நரம்பு சம்பந்தமான பிரச்சினைகளை அதிகளவு உள்ளெடுக்கும் போது ஏற்படுத்தலாம். இவ் நட்சத்திரப் பழத்தை சிறுவர்களுக்கு தாராளமாகக்கொடுக்கலாம். நீர்ச்சத்து, நார்ச்சத்து, சிறிதளவு காபோவைதரேற்று, உயிர்ச்சத்து C , எதிர் ஒட்சியேற்றத்தன்மை (antioxident) ஆகியன இருப்பதால் குழந்தைகள் சாப்பிடலாம். ஈரலைப் பலப்படுத்தக்கூடியது. ஈரலில் கொழுப்புப்படிவதை (fatty liver) தடுக்கக்கூடிய சிறனந்த பழமாகும். இரத்தத்தில் கொலஸ்ரோலை கட்டுப்படுத்தக் கூடிய தன்மையும், கொழுப்பு ஒட்சியேற்றத்தை தடுக்கக் கூடிய சத்துக்களும் இப்பழத்தில் உண்டு. இப்பழத்தில் உயிர்ச்சத்து C,A இருப்பதால் இதனால் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கச் செய்வதோடு கொலாறின் உற்பத்தியை



கூட்டும் இரசாயனப் பதார்த்தங்களும் காணப்படுவதால் முகச்சுருக்கம், தோல்ச்சுருக்கம் வருவதைத் தடுப்பதால் இளமையாக இருப்பதோடு உயிர்ச்சத்து C நிறைந்த பழமாக இருப்பதால் இரத்தத்திலுள்ள நச்சுக்களையும் இலகுவில் வெளியேற்றக் கூடியதாக இருக்கும். அத்துடன் நார்ச்சத்தும், பொட்டாசியம் சத்தும் இருப்பதால் இரத்த ஓட்டத்தை சீராக்குவதோடு உயர் இரத்த அழுத்தத்தையும் சீராக பேணக் கூடியதாக இருக்கும். இயற்கை யாக இப்பழங்களை மென்று சாப்பிடும்போது இப்பழத்திலுள்ள அதிக நீர்ச்சத்து, நாரச்சத்து செரிமான மண்டலத்தை சீராக்குவதோடு, மேலதிக உணவு எடுப்பதைக் கட்டுப்படுத்துவதுடன் மலச்சிக்கலையும் நீக்கக்கூடிய தாக இருக்கும். இத் தமரத்தம் பழத்தில் இரண்டு இலைகள் உண்டு. ஒன்று இனிப்புச் சுவையுடையது. மற்றைய இனம் புளிப்புச் சுவையுடையது. புளிப்புச் சுவையுடைய பழத்தின் யூஸா னது தடிமன், இருமலுக்கு சிறந்த பலனைக் கொடுக்கும். தமரத்தப்பழத்தில் அதிகளவு அமிலத் தன்மை இருப்பதால் வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது. மாலை வேளை, இரவு சாப்பாடு நேரம் போன்ற வேலைகளில் சாப்பிட லாம். தமரத்தம் பழத்தில் (புளிப்புச் சுவையுடையது) இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப் படுத்தும் தன்மை இருப்பதால் நீரிழிவு நோயாளிகள் அளவாக சாப்பிடலாம். தமரத்தம் பழத்தில் உயிர்ச் சத்து C மற் றும் B5 காணப்படு வதால் தலைமுடி வளர்ச்சியை வேக மாக்கும் தன்மை இருக்கும் . தமரத்தம் பழம் ஒரு போசாக்கு நிறைந்த பழமாகும். அதிகளவு உயிர்ச்சத்துக்கள் C,A மற்றும் இரும்புச்சத்துகளும் காணப் படுகிறது. அதே போல் antioxident தன்மை குறைந்த கலோரி காணப் படுவதால் ஆரோக்கியமான, மருத்துவ குணாங்கள்நிறைந்த போசாக்கு உணவாகும்.

தமரத்தம்பழத்தை அசைவ உணவுகளான சிக் கன், கடலுணவுகளுடன் சேர்த்து சமைத்துச் சாப்பிடும் போது இன்னும் சிறந்த பலனைக் கொடுப்பதோடு அசைவ உணவிலுள்ள இரும் புச்சத்தை இன்னும் இன்னும் அகத்துறிஞ்சக் கூடிய நிலையை எற்படுத்தும். தமரத்தம் பழத்திலுள்ள சக்கரையில் உயர்த்து திறன் குறைவாக காணப்படு வதால் நீரிழிவு நோயாளிகள் சாப்பிடலாம்.

இப்பழமானது வெப்ப வலய நாடுகளிற்கு உரிய பழமாகும். இலங்கை, இந்தியா, மலேசியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அதிகம் வரக்கூடியதாகும். பொதுவாக இயற்கை மருத்துவத்தில் குடல் சம்பந்தமான நோய்கள், கழிச்சல், வயிற்றுப் புண், சளி, இருமல், தோல் தொற்றுக்கள், மலச்சிக்கல் போன்ற நோய்களில் தமரத்தம் பழம் சேர்த்து மருந்துகள் தாராளமாக பயன் படுத்தப்படுகின்றது. தமரத்தம் பழத்திலிருந்து ஜாம், ஊறுகாய் போன்றன தயாரித்தும் பயன் படுத்தலாம். தமரத்தம் பழத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி தாபிதத்தை குறைக்கக் கூடிய (Reduce-inflammation) கொலஸ்ரோலை கட்டுப்படுத்துகின்றது. மற்றும் ஈரலில் கொழுப்பு படிவதை தடுக்க கூடியதுமான தன்மை இருப்பதால் நவீன ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றது. பற்களைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு நீங்கள் தூரிகையால் பற்களை சுத்தம் செய்து பின்பு நார்த்தன்மை நிறைந்த நீர்ச்சத்துள்ள பழமான நட்சத்திர பழத்தை மென்று சாப்பிடும் போது இயற்கையாகவே பற்களைச் சுத்தம் செய்யும் ஆற்றலுண்டு. அதாவது Natural cleanser (self- cleaning) தன்மை இப்பழங் களிற்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 611



சற்றுத் தூரத்தில் படகில் வந்து கொண்டிருந்த குந்தவை தேவியாகத்தான் இருக்க வேண்டும்.

தன்னை எதற்காக அவர் காப்பாற்றி இருக்க வேண்டும்? ஒரேயடியாக முழுகித் தொலைந்து போகும் படி விட்டிருக்கக் கூடாதா? கண்களைத் திறந்து பேசுவதற்கு முடிந்தவுடனே, "ஏன் என்னைக் காப்பாற்றினீர்கள்?" என்று இளையபிராட்டியுடன் சண்டை பிடிக்க வேண்டும்! தம்முடைய அருமைத் தம்பியிடம் அவருடைய அன்பு இவ்வளவு தானா?

இதோ இளையபிராட்டி பேசுகிறார். என்ன சொல்கிறார்? யாரிடம் சொல்கிறார்? கேட்கலாம்.

"மயக்கத்தில் ஏதேதோ பிதற்றுகிறாள்! இந்த மட்டும் உயிர் பிழைத்ததே பெரிய காரியம்! நம்முடைய படகு மட்டும் இன்னும் சற்றுத் தூரத்தில் இருந்திருந்தால்? இவள் ஓடையில் விழுந்தது நம் கண்ணில் படாமற் போயிருந்தால்? அதை நினைத்தாலே எனக்குக் கதி கலங்குகிறது!"

"நாம் பாராமல் விட்டிருந்தால், ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிருக்கும் இந்தப் பெண்ணின் வாழ்க்கை இனிதாக முடிந்திருக்கும். தங்களால் உயிர் பிழைத்த கொடும்பாளூர் இளவரசி வாழ்க்கையில் எவ்வளவோ மனவேதனைப்பட வேண்டியிருக்கும்"

'ஆகா! இது யார்? நம்மிடம் இவ்வளவு அனுதாபத்துடன் பேசுகிறது? ஆம், அந்த வாலிபர் தான் குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரசலாற்றங்கரையிலும் பார்த்த அந்த வீர வாலிபர் தான்! இளவரசர் கடலில் முழுகிய செய்தியையும் அவரே கொண்டு வந்திருக்க வேண்டும். இன்னும் இவர்கள் என்ன பேசிக் கொள்ளப் போகிறார்கள்? கேட்கலாம், கண்ணைத் திறக்க முடியாவிட்டாலும் காது நன்றாய்க் கேட்கிறதல்லவா!'

"இது என்ன, இவ்வளவு நெஞ்சிரக்கம் இல்லாமல் பேசுகிறீர்? ஆண்பிள்ளைகளின் மனதே கல் மனதாகத்தான் இருக்குமோ?" என்றது இளையபிராட்டியின் குரல்.

"அப்படிக் கல் நெஞ்சன் என்று தீர்ப்புக் கூறும் படியாக இப்போது நான் என்ன சொல்லி விட்டேன்?"

"இந்தப் பெண் இறந்திருந்தால் நல்லது என்று சொன்னீரே, அது போதாதா? எவ்வளவு சிரமம் எடுத்து இவளை நான் வளர்த்து வருகிறேன் தெரியுமா?" "இவள் பிதற்றிய வார்த்தைகளைத் தாங்கள் கேட்டீர்களா?"

உம்முடைய செவிகளில் என்ன விழுந்தது? இளவரசரை மணந்து கொள்வது பற்றி ஏதோ சொன்னதாகக் காதில் விழுந்தது ஆம், நினைவு தெரியாத மயக்கத்திலே கூட அவளுடைய வாய் அப்படி முணு முணுத்தது. இளவரசர் மீது ஆசை அவள் உள்ளத்தில் அப்படி வேரூன்றியிருக்கிறது."

அந்த ஆசை இந்தப் பெண்ணுக்கு நல்லதல்ல! அதனால் துன்பமும், ஏமாற்றமும் தான் ஏற்படும்.

ஏன் அவ்வாறு சொல்கிறீர்? இவளைக் காட்டிலும் இளவரசருக்கு ஏற்ற உயர்குலப் பெண் வேறு யார்? புராதனமான கொடும்பாளூர் வீரவம்சத்தைப் பற்றி உமக்குத் தெரியாதா?"

"நன்றாய்த் தெரியும். நான் நினைப்பது ஒன்று. தாங்கள் சொல்வது இன்னொன்று. இந்தப் பெண் எவ்வளவு உயர்குலமாயிருந்தால் என்ன? இவள் மனத்திலுள்ள சபலம் நிறைவேறப் போவதில்லை"

(தொடரும்)

---

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

வலி கிழக்கு பிரதேச சபை புத்தூர் பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## ஓநாயின் வயிற்றில் ஆட்டுக் குட்டிகள்



முன்னொரு காலத்தில் காட்டை அடுத்து குடிசை ஒன்று இருந்தது. அந்தக் குடிசையில் ஆடு ஒன்று வாழ்ந்து வந்தது. அது ஏழு குட்டிகளைப் போட்டது. அந்தக் குட்டிகள் ஓடியாடி விளையாடின இதைப்பார்த்து மகிழ்ந்தது ஆடு.

வழக்கம் போல அந்த ஆடு வெளியே புறப்பட்டது. குட்டிகளைப் பார்த்து "என் அன்புக் குழந்தைகளே! உங்களுக்கு உணவு கொண்டுவர காட்டிற்குச் செல்கிறேன். நான் இல்லாத நேரத்தில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். கொடிய ஓநாய் ஒன்று இந்தக் காட்டில் உள்ளது. அது சூழ்ச்சி நிறைந்தது. அதனிடம் சிக்கிக் கொண்டால் உங்களைத் தின்று விடும். என்னைத் தவிர யார் கதவைத் தட்டினாலும் திறக்காதீர்கள் என்றது அது.

'அம்மா! நாங்கள் கவனமாக இருப்போம். நீ எங்களைப் பற்றிக் கவலைப்படாமல் போய்வா!" என்றது இன்னொரு ஆட்டுக் குட்டி. அங்கிருந்து சென்றது ஆடு. சிறிது நேரம் சென்றது அந்தக் குடிசையின் அருகே ஓநாய் வந்தது.

"கதவு தாழ்ப்பாள் போடப்பட்டு உள்ளதே! ஆட்டுக் குட்டிகளை ஏமாற்றி எப்படித் திறக்க வைப்பது" என்று சிந்தித்தது. கதவைத்தட்டிய அது "அன்புக் குழந்தைகளே! சுவையான உணவுடன் வந்திருக்கிறேன். எல்லோரும் மகிழ்ச்சியாக உண்ணலாம் கதவைத் திறந்து விடுங்கள்" என்றது. ஓநாயின் கொடூரமான குரலைக் கேட்ட ஆட்டுக்குட்டிகள் நடுங்கின. "நீ எங்கள் தாய் அல்ல ஓநாய். எங்களை உன்னால் ஏமாற்ற முடியாது. நாங்கள் கதவைத் திறக்க மாட்டோம். இங்கிருந்து போய்விடு" என்றது ஓர் ஆட்டுக்குட்டி. சூழ்ச்சி தெரிந்து விட்டது என்றது ஓர் ஆட்டுக்குட்டி.

சூழ்ச்சி தெரிந்து விட்டதே என்று ஓநாய் திகைத்தது. "ஆட்டுக் குட்டிகளே! என்னை ஓநாய் என்று எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டது. "எங்கள் தாய் இனிமையான குரலில் பேசுவார் உனக்கோ கொடூரமான குரல் உள்ளது. நீ பேசினாலே ஓநாய் என்பது தெரிந்து விடுகிறது" என்று சொன்னது இன்னோர் ஆட்டுக்குட்டி.

'உங்களையா ஏமாற்ற முடியாது? என் திறமையைப் பார்க்கப் போகிறீர்கள் அப்பொழுது நீங்கள் எல்லோரும் என் வயிற்றில் இருப்பீர்கள் என்று கூறியது ஓநாய். அருகில் இருந்த ஊருக்குச் சென்று அங்கு இருந்த மளிகைக்கடைக்குள் நுழைந்து ஒரு பாத்திரத்தில் இருந்த வெண்ணையை எடுத்த தனது நாவில் தடவிக் கொண்டது. இப்பொழுது எனது குரல் இனிமையாக இருக்கும் என எண்ணி ஆட்டுக் குட்டிகளின் குடிசையை அடைந்து கதவைத் தட்டி அன்புக் குழந்தைகளே! கதவைத் திறந்து விடுங்கள் என்று மென்மையாகப் பேசியது. "அம்மா வந்து விட்டார் கதவைத் திறப்போம் என்று ஒரு ஆட்டுக் குட்டி சொன்னது. "நாம் எதற்கும் கவனமாக இருப்போம் அம்மா தானா என்று உறுதிப்படுத்திக் கொள்வோம்" என்றது இன்னொரு ஆட்டுக்குட்டி.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென் பகுதியில் அரசியலில் மட்டுமல்ல பௌத்தத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது

வடக்கு கிழக்குத் தமிழர் தாயகம் முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரித்த வேட்பாளர்களின் எண்ணிக்கையால் திணறுகிறது. அதிலும் வடக்கு மாகாணத்தின் நிலைமை சொல்லிமாளா.

நிலைமை இதுவாக இருக்கையில், யாருக்கு வாக்களிப்பது என்பது தெரியாமல் ஏதோ நடந்தாகட்டும் என்ற வெறுப்பு நிலை பொது மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

முன்பெல்லாம் தமிழ் மக்கள்; தமிழ் அரசியல் கட்சி சார்ந்து தமது ஆதரவை வழங்குவர். அந்த ஆதரவு அடுத்த பரம்பரைக்கும் கடத்தப்பட்டது.

ஆனால் அந்த அரசியல் பண்பாடு இன்று நிர்மூலமாகியுள்ளது. அதற்கு மூல காரணம் தமிழ் அரசியல் கட்சியைப் பொறுப்பேற்றவர்கள் அந்தப் பண்பாட்டு நடைமுறையை விளங்கிக் கொள்ளாமல் சுயநல சிந்தையுடன் நடந்து கொண்டதுதான்.

பரவாயில்லை. தோன்றியவை மறைவதும் புதியன தோன்றுவதும் இயற்கை.

ஆக இப்போது, பழைமைவாய்ந்த அரசியல் கட்சிகளுக்கு நேர்ந்த அவலத்துக்குக் காரணம் என்ன? என்று ஆய்வு செய்வதற்கு இஃது நேரமல்ல.

இப்போது நம் மத்தியில் இருக்கின்ற பிரச்சினை யாரைப் பாராளுமன்றம் அனுப்புவது என்பது தான்.

ஆம், ஏகப்பட்ட கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிடும்போது, தமிழ் மக்கள் தமது இலக்கைத் தவறவிடுகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாக இருந்தால், அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இங்குதான் தமிழ் மக்களை வழிப்படுத்துகின்ற கடமையை நம் மதத் தலைவர்கள் செய்தாக வேண்டும்.

எனினும் அத்தகைய வழிப்படுத்தல்களைச் செய்வதற்கு நம் மதத் தலைவர்களும் தயார் இல்லை.

மதத் தலைவர்களைப் பொறுத்தவரை அவர்களிடமும் மக்கள் – மனிதர்கள் – மனிதநேயம் என்பதைக் கடந்து, தத்தம் சமயத்தை முதன்மைப்படுத்துகின்ற நோக்கமே விஞ்சியுள்ளது.

இதன் காரணமாக இத்தேர்தல் காலத்தில் தத்தம் மத ஆதிக்கத்தை எங்ஙனம் பிரயோகிக்க முடியும் எனச் சிந்திக்கின்றனர்.

அதேநேரம் தென்பகுதியில் அரசியல் மாற்றத்தை சிங்கள மக்கள் ஏற்படுத்திவிட்டனர்.

அந்த மாற்றத்துக்கு பௌத்த பீடங்கள் அமைதியாக இருந்து ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

இதையும் கடந்து, மதபீடங்களின் போக்குகளிலும் மாற்றம் ஏற்படவேண்டும் என்ற மேலான சிந்தனை இளம் பௌத்த பிக்குகளிடம் ஏற்பட்டுள்ளது.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பதவியேற்கும் போது, தேசிய கீதம் இசைக்கபட்ட வேளை அங்கிருந்த பௌத்த பிக்குகள் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

ஆனால் அநுரவுக்கு முன்பான இலங்கை அரசியலில் பௌத்த பிக்குகள் மமதையோடு அமர்ந்திருப்பர். ஆக, தென்பகுதியில் அரசியலில் மட்டுமல்ல, பௌத்த பீடக் கட்டமைப்பிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இதை நம்மதத் தலைவர்கள் புரிந்துகொண்டு; எம் தமிழினம் சார்ந்து முக்கிய முடிவுகளை எடுத்து, மக்களை வழிப்படுத்த வேண்டும்.

## எமது உரிமையை வென்றெடுக்கக் கூடிய நேர்மையானவர்களுக்கு வாக்களியுங்கள்

### மன்னார் ஆயர் அறிக்கை

(மன்னார்)

நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்திற்கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை பாராளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக் கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் (2024) தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் விடுத்திருக்கும் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், இலங்கை நாட்டு மக்களாகிய நாம் மீண்டுமொரு தேர்தலை எதிர்நோக்கி நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு இப்போது பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கிறோம்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. வடக்கு மாகாணத்தில் வன்னித்தேர்தல் மாவட்டம் மற்றும் யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டம் என இரண்டிலும் சேர்த்துக் குறித்தொதுக்கப்பட்டுள்ள 12 ஆசனங்களுக்காக 45 அரசியல் கட்சிகளும் 46 சுயேட்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன. வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் 800க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களம் காண்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து வருகின்ற இந்த பாராளுமன்றத் தேர்தலானது இலங்கை முழுவதும் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதியாகிய தமிழர் தாயகப் பகுதியில் பலத்த எதிர்பார்ப்புகள் நிறைந்த தேர்தலாக அமைந்துள்ளது.

உரிமை மறுப்புக்கு இலக்கான சிறுபான்மை மக்களாகிய நாம் நமது அனைத்து வகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆகக்கூடிய வழிமுறை அரசியல் தான். இந்த அரசியல் பிரதிநிதிகளாக போட்டியிடுகின்ற அனைவரும் அதன் கனதியை உணர்ந்தவர்களா? என்பது கேள்விக்குறியே.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்புமுனைகள் நிறைந்த ஒரு கால கட்டத்தில் நாம் நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தலின்போது தெற்கில் ஏற்பட்ட அரசியல் சிந்தனை மற்றும் வடக்கு, கிழக்கிலும் இந்தத் தேர்தலில் ஏற்பட வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது. அதேவேளை என்றுமில்லாதவாறு அதிக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள இத்தேர்தல் பொது மக்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்பதையும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் வாக்காளர்கள் தமது கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். 30 வருட அகிம்சைப் போராட்டமும் 30 வருட ஆயுதப் போராட்டமும் எதற்காக ஏற்பட்டனவோ அந்தக் காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளன. இந்நிலையில் நமது நாளாந்தப் பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில், அவற்றை மட்டும் கருத்திற்கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை பாராளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக் கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும். தமிழ் மக்களாகிய நாம் நமது சுயநிர்ணய உரிமை உட்பட காலாகாலமாக நாம் வலியுறுத்தி வருகின்ற கோட்பாடுகளைத்தொடர்ந்து முன்னகர்த்திச் செல்லக் கூடியவர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

உறவினர், நண்பர் போன்ற வட்டங்களைக் கடந்து செயற்படக்கூடிய தமிழ்த் தேசியத்தை முன்னிலைப் படுத்தக்கூடிய, இலஞ்ச ஊழலற்ற செயற்திறன் வாய்ந்த சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

மாறிவரும் அரசியல் பொருளாதார சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ப தேர்தல் தொடர்பான சமகால அரசியல் தொடர்பான நமது பார்வையிலும் கண்ணோட்டத்திலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நமக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு தீர்மானமிக்க தேர்தலாக இது அமைவதற்கு நாம் எல்லோரும் நமது வாக்குரிமையை பயன்படுத்துவோம். நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் மிகுந்த பொறுப்புணர்வோடு செயற்படுவோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

## யாழ். இந்துவில் இன்று விவாதச்சமர்

கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரி, மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிகள் மோதும் "சொற்களரி 2024" விவாதச் சமர் இன்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இடம் பெறவுள்ளது.

இன்றைய உலக மயமாதற் சிந்தனை மரபின் காரணமாக ஏற்படும் தனி அடையாளச்சிதைப்பு மனித குலத்துக்கு சாதகமான விளைவுகளைத் தரும் எனும்வாதம்ஏற்புடையது/ இல்லை எனும் த்லைப்பிலே குறித்த விவாதம் இடம்பெறவுள்ளது. (ம-7)

## யாழ்.பல்கலைக் கழகத்தில் ஆவணப்படம் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் காண்பியல் ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் நாடகமும் அரங்கக் கலைகளும் துறையின் ஏற்பாட்டில் ஈழத்து அரங்க ஆளுமை ஏ.சீ .தாசீசியஸ் குறித்தான ஈழக் கூத்தன் ஏ.சீ .தாசீசியஸ் எனும் ஆவணப்படத் திரையிடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் நாடக ஆர்வலர்களையும், திரை ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ந-7)

## சங்குச் சின்னத்தைப் பெறுவது தேர்தல் சட்டத்திற்குரியது

### எனக்கு அது சொந்தமல்ல– அரியம்

சங்குச் சின்னம் என்பது எனக்கு எழுதித் தரப்பட்ட சின்னமல்ல.

அது ஒரு சுயேட்சையின் சின்னமாகும். இலங்கை அரசியல் யாப்பில் தேர்தல் சட்டத்தின்படி, சுயேட்சைக்குழுவில் யாரும் போட்டியிடலாம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளராக போட்டியிட்டவருமான பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் இலங்கை அரசியல் யாப்பில் தேர்தல் சட்டத்தின்படி, சுயேட்சை குழுவில் யாரும் போட்டியிடலாம். அதில் நூற்றுக்கு மேற்பட்ட சின்னங்கள் வெளியிடுவார்கள். அதில் வருகின்ற ஒரு சின்னத்தை குறிப்பிட்ட குழுவுக்கு வழங்குவார்கள். இது வழக்கம்.

அந்த அடிப்படையில் நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது நான் விரும்பிய சங்குச் சின்னத்தைப் பெற்றுக்கொண்டேன்.

அப்போது முப்பது நாட்களுக்கு மாத்திரம்தான் சங்குச் சின்னத்தை நான் பாவிப்பதற்கு தேர்தல் ஆணையம் எனக்கு அனுமதி வழங்கியிருந்தது.

அந்தச்சின்னத்தை பயன்படுத்தி பரிபூரணமாக தமிழ்ப் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் 83 சிவில் அமைப்புகளும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து என்னைக் களமிறக்கியதனால் நான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன்.

நான் அந்த ஏழு கட்சிகளிலோ, 83 சிவில் அமைப்புகளிலோ அங்கத்துவம் வகிக்கவில்லை. நான் இலங்கைத்தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர்.

இன்றும்இலங்கைத்தமிழரசுக் கட்சியிலேதான் இருந்துகொண்டிருக்கிறேன். எனவே சங்குச் சின்னத்தை ஜனாதிபதித் தேர்தலுக்காக பாவித்தது உண்மை.

பின்னர் அந்தச் சின்னத்தை யார் எடுக்கிறார்கள், எவ்வாறு எடுப்பது என்பது தொடர்பில் தேர்தல் சட்டதிட்டங்கள் உள்ளன. சுயேட்சைக் குழுவாக யார் தேர்தல்களில் போட்டியிட்டாலும் அல்லது அரசியல் கட்சிகள் போட்டியிட்டாலும் சின்னங்களை கோருவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.

ஒரு கட்சி கோருமாக இருந்தால் அவர்களுக்கு அவர்கள் கேட்கின்ற சின்னத்தை வழங்குவார்கள்.

இரண்டுக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒரு சின்னத்தை கோருவார்களாக இருந்தால் திருவுளச்சீட்டு மூலம் அந்தச் சின்னத்தைத் தேர்தல் ஆணையம் வழங்கும்.

ஆகவே, சங்குச் சின்னத்தை இப்போது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்கின்ற அமைப்பு பெற்றுள்ளது. அதற்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை – பகுதி I

10

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1977 தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டுத் தோற்றாலும், பின்னர் 1979 இல் காலித் தொகுதிக்கு இடம்பெற்ற இடைத்தேர்தலில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று 1989 வரை பாராளுமன்றம் சென்றார். 1986 முதல் 1988 வரை கூட்டுறவுத்துறை அமைச்சராகவும் பதவியில் இருந்தார். இந்நாட்டில் கல்வியமைச்சராக, உள்நாட்டமைச்சராக, ஏன் பிரதமராகவும் கூட இருந்த கலாநிதி விஜயானந்த தகநாயக்க அப்பதவிகள் வகிக்கும் காலத்தில் பொதுப் போக்குவரத்து வாகனங்களான பஸ்களில், புகையிரதங்களில் பயணித்தமை வரலாறாகும்.

ஒருதடவை அன்றைய அரசு உடு புடவைகளின் விலையை உயர்த்தியதை கண்டித்து, ஏழை மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு கோவணம் அணிந்து பாராளுமன்றத்திற்கு வந்திறங்கினார்.



ஆனால், சபாநாயகர் அவரை அந்த ஆண்டி கோலத்தில் பாராளுமன்றின் உள்ளே அனுமதிக்கவில்லை.

ஆனால், சமகாலத்தில் தூய வெண்ணிற ஆடைகளை அணிந்து சொகுசு வாகனங்களில் பாராளுமன்றம் வரும் அரசியல்வாதிகள், அநாகரீகமாக நடந்து அம்மணமாகியிருக்கிறார்கள். அந்த "அம்மணக்காட்சி" களை ஊடகங்களில் பார்த்து வருகின்றோம்.

### சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ், தேர்தல் மாவட்டங்களின் எல்லை நிர்ணயத் திருத்தம்

சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல் மாவட்டங்களின் எல்லை நிர்ணயத்தின் முதல் திருத்தம் 1959 இல் நடந்தது. தல்கொடபிடிய எல்லை நிர்ணய ஆணைக்குழு பின்வருமாறு திருத்தம் செய்தது.

மாகாணத்தின் விஸ்தீரணத்தை மூலதாரமாகக் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டபோது மாகாணத்துப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம் - 1, மத்திய மாகாணம் - 2, தென் மாகாணம் - 2, வட மாகாணம் - 4, கீழ் மாகாணம் - 4, வடமேல் மாகாணம் - 3, வட மத்திய மாகாணம் - 4, ஊவா மாகாணம் - 3 மற்றும் சப்பிரகமுவ மாகாணம் - 2. மொத்தம் -25.

விஸ்தீரணம் மற்றும் சனத்தொகை (மக்கள் தொகை கணக்கெடுப்பு 1958) அடிப்படையில் மாகாண மட்டத்தில் மொத்தப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர். மேல் மாகாணம் -35, மத்திய மாகாணம் -23, தென் மாகாணம் - 19, வட மாகாணம் - 13, கீழ் மாகாணம் -11, வடமேல் மாகாணம் - 16, வட மத்திய மாகாணம் -8, ஊவா மாகாணம் -10 மற்றும் சப்பிரகமுவ மாகாணம் - 16. மொத்தம் -151.

மாகாண மட்டத்தில் பல அங்கத்தவர்கள் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டாலும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 151 ஆக இருத்தல் வேண்டும். இவ்வரம்புகளை மீறாது புவியியல் அம்சங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை கருத்தில் கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயம் செய்யப்படவேண்டும், தேர்தல் தொகுதிகளுக்குப் பெயரிடல் என்பனவும் உள்ளடங்கியிருந்தன.

இக் குழுவினால் 5 பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன.அவ்வாறு உருவாக்கப்பட்ட பல் அங்கத்தவர்கள் தொகுதிகள் பின்வருமாறு. மத்திய கொழும்பு - 3 அங்கத்தவர்கள் தொகுதி, கொழும்பு தெற்கு, அக்குறணை, மூதூர், மற்றும் மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள். மற்றவை எல்லாம் ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் ஆகும். எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் 151 பிரதிநிதிகளும் 145 தேர்தல் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் 6 பிரதிநிதிகள் பிரதமரின் ஆலோசனைப்படி மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர், இதனால் மொத்தம் 157 உறுப்பினர்கள்.

வட மாகாணத் தேர்தல் தொகுதிகள் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை, சாவகச்சேரி, உடுவில், நல்லூர், உடுப்பிட்டி, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை மாவட்டத் தேர்தல் தொகுதிகள் திருகோணமலை, மூதூர் (இரட்டை அங்கத்தவர்கள்), மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் தொகுதிகள் கல்குடா, மட்டக்களப்பு (இரட்டை அங்கத்தவர்கள்), பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில், அம்பாறை, நிந்தவூர் ஆகியவையாகும்.

1960 மார்ச், 1960 யூலை, 1965, 1970 ஆண்டுத் தேர்தல்களில் இதே எண்ணிக்கை தான் பின்பற்றப்பட்டது.

எல்லை நிர்ணய ஆணைக்குழு குறிப்பிட்டதுபோல் ஒவ்வொரு சமூகத்திற்கும் கிடைக்கவேண்டிய அங்கத்தவர்கள் எண்ணிக்கையையும் தேர்தலில் கிடைக்கப்பெற்ற அங்கத்தவர்கள் எண்ணிக்கையையும் ஒப்பிடும்போது அட்டவணை - 3 இல் காட்டப்பட்டது போல் அமைந்திருந்தது.

### சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் 4 ஆவது பாராளுமன்றத் தேர்தல்-1960 மார்ச்

பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்டதை அடுத்து டபிள்யூ. தகநாயக்க 26 செப்ரெம்பர் 1959 பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆனாலும் ஆளும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட பிளவுகளை அடுத்து டபிள்யூ. தகநாயக்க பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

இலங்கையின் 4 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1960 மார்ச் 19 இல் நடைபெற்றது. இத் தேர்தலின் போது இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

1 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 19 நாட்களிலும் 2 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 4 நாட்களிலும் 3 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 3 நாட்களிலும் நடைபெற்ற போதிலும் கூட ஒரே நாளில் நடத்தி முடிக்கப்பட்ட தேர்தலாக 4 ஆவது பாராளுமன்றத் தேர்தலைக் குறிப்பிடலாம்.

1960 ஆம் ஆண்டளவில், இலங்கையின் ஆளும் மகாஜன எக்சத் பெரமுன (எம்ஈபி) கூட்டணி பிளவடையும் நிலையில் இருந்தது. நெற்காணிப் பிரச்சினையில் கூட்டணியில் இருந்த சிறிய மார்க்சியக் கட்சிகள் கூட்டணியில் பெரும் கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் முரண்பட்டு விலகின.

இன்னும் ஒரு மார்க்சியக் கட்சியான விப்லவகாரிலங்கா சமசமாஜக் கட்சி புதிய கட்சி அமைத்து மக்கள் ஐக்கிய முன்னணி (மகாஜனஎக்சத் பெரமுன) என்ற பெயரை எடுத்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முந்தைய ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டார நாயக்காவின் மறைவிற்குப் பின்னர் பிளவடைந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தேர்தலில் கொண்டிருந்தன. (தொடரும்...)

| எல்.எம். டி. த. சில்வா எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் படி கிடைக்கவேண்டிய அங்கத்தவர்கள் எண்ணிக்கை | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியர் (முஸ்லீம் தவிர) | முஸ்லீம் | தீர்மானிக்க முடியாத மற்றும் ஏனைய இனத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| நாட்டின் (1958ம் ஆண்டு) சனத்தொகை அடிப்படையில் | 106 | 17 | 18 | 10 | 0 | 151 |
| **தேர்தல்களில் கிடைக்கப் பெற்ற அங்கத்தவர்கள்** | | | | | | |
| 1960ம் ஆண்டுத் (மார்ச்) தேர்தல் முடிவுகள் | 123 | 18 | 0 | 9 | 1 | 151 |
| 1960ம் ஆண்டுத்(யூலை) தேர்தல் முடிவுகள் | 121 | 18 | 0 | 11 | 1 | 151 |
| 1965ம் ஆண்டுத்தேர்தல் முடிவுகள் | 122 | 17 | 0 | 11 | 1 | 151 |
| 1970ம் ஆண்டுத்தேர்தல் முடிவுகள் | 123 | 19 | 0 | 8 | 1 | 151 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் - கொழும்...

குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என யாழ்.புகையிரத நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

யாழ்.- கொழும்பு புகையிரத சேவை ஆரம்பிக்கப்படுவது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்புத் தமக்குக் கிடைத்தால், அது தொடர்பில் தாம் பொதுமக்களுக்கு ஊடகம் வாயிலாகத் தெரியப்படுத்துவோம் என்றும் யாழ்.புகையிரத நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் மணித்தியாலத்துக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் தொடருந்துகள் பயணிக்கக்கூடிய வகையில் வடக்குத் தொடருந்து மார்க்கத்தில் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில், உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமல் குறித்த மார்க்கத்தினூடாகத் தொடருந்து சேவையை முன்னெடுக்க முடியாது என தொடருந்து கட்டுப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-7)



















## செலவு...

ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரச் செலவு தொடர்பான அறிக்கைகளை கையளிப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியிருந்த கால அவகாசம் கடந்த 13ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பாளர்களில் 35 வேட்பாளர்கள் உரிய அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

இருப்பினும் பத்தரமுல்ல சீலரத்ன தேரர், சுயேட்சை வேட்பாளர் சரத் கீர்த்திரத்ன மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆகியோர் வருமானம் மற்றும் செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ந-7)

## இடைக்கால...

ஏனெனில், அடுத்த வருடத்துக்கான வருமான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே செலவுகளைத் திட்டமிட முடியும். இடைக்கால கணக்கு வாக்கெடுப்பை அனுமதித்து கொள்வதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியாது. வருமான வழிகளையும் திட்டமிட முடியாது என முன்னாள் அமைச்சரும் புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்காமல் இடைக்கான கணக்கு வாக்கெடுப்பொன்றை அனுமதித்துக் கொள்ளப்போவதாகத் தெரிவித்திருக்கிறது.

பாராளுமன்றத் தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி இடம்பெற்று 21ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டுவதாக தெரிவித்துள்ள நிலையில், டிசம்பர் முதல்வாரத்துக்குள் அமைச்சரவையை அமைத்து, வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு காலம் போதுமானதாகும். இடைக்கால கணக்கு வாக்கெடுப்பை அனுமதித்துக் கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவுகளுக்கு மாத்திரமே நிதி ஒதுக்க முடியும். அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியாது. வரி செலுத்துபவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளுக்கமைய எமது மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த விடயங்கள் அனைத்தையும் வரவு - செலவுத் திட்டத்தின் மூலமே திட்டமிட முடியும் என்றார். (ந-7)

## 2025...

வர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்குவது மற்றும் பின்தங்கிய மற்றும விசேட தேவைகொண்ட சமூகங்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பது குறித்தும் இந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவு கவனம் செலுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் வரவு செலவுத் திட்டத்தை விரைவாகச் சமர்ப்பிப்பது [illegible] முன்னதாக [illegible] தது.

இதனால் அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## சுத்தமான...

கருத்துரைக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனூடாக ஆசியாவில் தூய்மையான நாடாக இலங்கை மாற்றமடையும் என தாம் நம்புவதாகவும் 2025ஆம் ஆண்டு நிறைவில் இலங்கையில் தூய்மையான புகையிரத நிலையம், பேருந்து நிலையம், சுகாதாரமான கழிவறைத் திட்டம் என்பவற்றைக் காணக்கூடியதாக இருக்கும் எனவும் இது சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் என்றார். (ந-7)

## உள்ளூராட்சித்...

துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## ஊழல்...

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் 400க்கு மேற்பட்ட கோப்புகள் விசாரணைகள் மேற்கொள்ளப்படாமல் முடங்கிப் போயுள்ளன. அனைத்துக் கோப்புக்களையும் மீண்டும் திறந்து படிப்படியாக வழக்குத் தொடர அவசியமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறோம். திருடர்களைப் பிடிக்கும் போது எவரும் சிணுங்காதீர்கள்.

சில கோப்புகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இறுகிப் போயுள்ளன. இன்னும்சில கோப்புகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் இருக்கின்றன.

அனைத்துக் கோப்புக்களையும் மீண்டும் திறந்து படிப்படியாக வழக்குத் தொடர அவசியமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறோம்.

மிகவும் திட்டமிட்ட வகையில் எல்லாத் தரவுகளையும் சேகரித்து முறைப்படி நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கத்தக்க வகையில் வழக்குகளை தாக்கல் செய்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை நாங்கள் வழங்கியிருக்கிறோம். எவருமே பதற்றமடைய வேண்டாம்.

இந்த நாட்டு மக்களின் எதிர்பார்ப்பைப்போலவே மோசடியாளர்களுக்கும் ஊழல்வாதிகளுக்கும் தண்டனை வழங்குகின்ற அரசாங்கம்தான் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம். நாங்கள் அதனைச் சாதிப்போம். அத்தோடு நின்றுவிடவும் மாட்டோம் என்றார். (ந-7)























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- உரும்பிராய் மருதனார்மடம் செல்லும் காப்பெற் வீதி 150 மீற்றர் தூரம்.
- நல்ல சூழல் குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- தரகர் தேவையில்லை.

(2372)

**077 638 5683**
**076 755 8606**


# முன்னாள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் துப்பாக்கிச் சூட்டில் பலி

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தையின் பிரத்தியேக செயலாளராக கடமையாற்றிய ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் மஹய்யாவ பகுதியில் வைத்து சுட்டப்பட்டதாகவும், அவர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டாரா என கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ம-7)


## சிறுநீரகம் தேவை

அவசரமாக $A^+$ வகை குருதியுடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது.
வயது எல்லை 25 - 40

தொடர்புகளுக்கு :
**077 041 6405**
Whatsapp
0031617990096(கொலன்ற்)
(2333)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (2371)

**076 825 7716** (ஆகாஸ்)

திங்கள் முதல் புதன் வரை | MARD | 21, 22, 23 10.2024

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 300 Fems 8 Pcs | Rs. 59.00 80 Anchor Yoghurt | Rs. 1799.00 2000 Protinex |
| Rs. 339.00 425 Vim Liquid | Rs. 2589.00 3000 Vitagen Vannila | Rs. 299.00 380 Sunlight Powder Rose | Rs. 1129.00 1190 Anchor Plus |
| Rs. 149.00 175 Santoor Soap | Rs. 439.00 480 Chick Shampoo | Rs. 2999.00 3335 Diabeta Plus | Rs. 379.00 500 Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg 1150 Prima Wheat Flour | Rs. 3499.00 3900 Sustagen 400g | Rs. 149.00 200 Noodles | Rs. 349.00 400 Pepsi 1.5L |

Call for information 074 1011 345
மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்) (C-1427)

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்) (459)

நீங்களும் விரைவில் அமெரிக்காவில்...இன்னும் சில நாட்களே உள்ளன

## அமெரிக்க அதிஸ்ட விசா

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L
55000 இலவச விசாக்கள்
0768226244

V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம். கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம்.

திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

**V2 Travels**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351 |
| 0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675 |
| 0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322 |
| 0764550671 | 0776699892 | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | 0768226230 | 0776697960 |

## Personal / Group Class

விவசாய விஞ்ஞானம்
**A/L 2026**
நேரடி வகுப்புக்கள்
ஆரம்பம் : 01.11.2024
கோப்பாய் சந்தி , கோப்பாய்.
**071 566 4773**
**074 070 0741**
(2370)

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1300/= France 2300/= Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**TCN Express**
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.
T.P - 077 755 4528
(458)


# யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்றத் தேர்தல் 2024


**பாராளுமன்றத் தேர்தலில் எமக்கு "மக்கள் ஆணை" கிடைத்தால் எம்மால் இவற்றைச் செய்யமுடியும்,**

1. சர்வதேச தரம், தேவைகளுக்கு ஏற்ற கல்வி முறை
2. உயர் கல்விக்கான கடன் உதவியினை அரசு மானியத்துடன் கோரல்
3. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு இலவச மருத்துவக் காப்புறுதி கோரிக்கை முன் வைக்கப்படும்
4. நவீன தொழில் முனைவோருக்கான திட்டங்களுடன் அதற்கான நிதியைப் பெற்றுக்கொடுத்தல்
5. தாயகம் திரும்புவோர் மற்றும் திரும்பியோருக்கான சிவில் உரிமைகள், வீடு, நிலம், தொழில், மற்றும் பாதுகாப்பு
6. புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் செய்யும் முதலீடுகளுக்கான பாதுகாப்பு மற்றும் அரசின் அனுமதி
7. தாயகத் தமிழர்கள்,புலம்பெயர் தமிழர்கள் இணைந்த தொழில் அபிவிருத்தி , மேம்பாடு , முதலீடு
8. சாரத்தியத்தை வாழ்வியல் அடிப்படைத் தொழிலாகக் கொண்டவர்கள் மற்றும் தெருவோர சிறுவியாபாரிகளின் பாதுகாப்பிற்கான சட்ட உதவி,கடனுதவி அரசிடம் கோரப்படும்
9. கடற்றொழிலாளர்கள் வாழ்வாதாரம், தொடர்பாக டீசல், மண்ணெண்ணெய்க்கான மானியம் அரசிடம் கோரப்படும். மேலும் எல்லை தாண்டி இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து போதைப் பொருட்களை நாட்டிற்குள் கொண்டுவந்தும் மீன் மற்றும் கடல் வளங்களைச் சூறையாடும் இந்தியக் கடல் கொள்ளையர்கள் விடயத்தில் இந்திய மத்திய அரசுக்கு கடும் அழுத்தம் கொடுப்பதுடன் மிகக் கடுமையான நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும். அத்துடன் சட்டவிரோதமான பாரிய இழுவைப் படகுகளுடன் எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் விடயத்தில் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படும்
10. வடக்கு விவசாய மேம்பாட்டிற்கான நுணுக்கங்கள், விஞ்ஞானப் பொறிமுறை, ஏற்றுமதித் திட்டங்கள் தொடர்பாக புலம்பெயர் தமிழர்கள் மற்றும் தமிழக விவசாயிகள் ஆலோசனையுடன் திட்டங்கள் முதலீடுகளை விரிவாக்க முழுமையான முயற்சிகள் மேற்கொள் எப்படும்.
11. வடக்கு மக்களின் பயணச் சிரமங்கள் செலவுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் "கடவுச்சீட்டு" (pass port) காரியாலயம் அமைக்க அரசிடம் கோரிக்கை வைக்கப்படும்
12. மூவின மக்களும் நாட்டின் பொருளாதாரத்தை கருத்திற்கொண்டு இணைந்த முதலீடுகளுடன் தொழில் புரிவதற்கான புரிந்துணர்வு, பாதுகாப்பு தொடர்பாக ஆராயப்படும்
13. இனச்சிக்கலுக்கான தீர்வு என்கிற முடிவில் சர்வதேசத் தலையீட்டுடன் "பொதுவாக்கெடுப்பு" கோரப்படும்
14. தமிழ் பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக உள்நாட்டு, சர்வதேச மட்டம் இணைந்த ஒரு பொறிமுறை உருவாக்கப்படும்.
15. கல்வி,சட்டம்,அதிகாரம்,சமமாகக் கிடைக்க வேண்டும். இதுவே தீர்வின் முதற்கட்டமாகும்.

**"லாந்தர்" சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சை 21 எம்மை ஆதரித்து வாக்களித்து வெற்றிபெறச் செய்யும்படி மக்களை வேண்டுகின்றோம் .**

**பாலசுந்தரம் கேதீஸ்வரன்,**
**தலைவர்,**
**சுயேட்சைகுழு 21,**
**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்.**

## சுயேட்சை குழு 21



X

(003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.